## 32. என் நேச கொடி உம்மேல

### பல்லவி

என் நேச கொடி உம்மேல படறட்டுமே
உம் பாச கொடி என்மேல வளரட்டுமே

### அனுபல்லவி

*நான் சிறுகனும் நீர் பெருகனும் - 2*

### சரணங்கள்

1. சுவிசேஷம் எல்லைகள் வளம்பெறனும்
   உமது நாமம் உயர்த்தபடனும்
   - நான் சிறுகனும்

2. அற்புத அடையாளங்கள் நடைபெறனும்
   உமது வசனம் உறுதிபடனும்
   - நான் சிறுகனும்

3. ஜெபிக்கின்ற குழுக்கள் பெருகிடவேணும்
   துதியின் சத்தம் முழங்கிடவேணும்
   - நான் சிறுகனும்

4. ஒளியின் ஆதிக்கம் மலரவேணும்
   இருளின் ஆதிக்கம் அழியவேணும்
   - நான் சிறுகனும்

5. பரிசுத்த வாழ்க்கையோ உருவாகனும்
   அசுத்த வாழ்க்கை எல்லாம் அழியபடனும்
   - நான் சிறுகனும்